# கருணாநிதி தேர்தலில் போட்டியிடமாட்டார்?

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 33 சித்திரை 2 றம்ழான் 29 இதழ்: 64

யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-04-1991

[சென்னை]
எதிர்வரும் தமிழக சட்டப் பேரவைத்தேர்தலில் தி.மு.க. தலைவர் கருணாநிதி போட்டியிடுவாரா? இல்லையா? என்பது குறித்து இன்னும் ஓரிரு நாட்களில் முடிவு தெரிந்துவிடும். சட்டசபைத் தேர்தலில் தாம் போட்டியிடப்போவதில்லை என்று திரு. கருணாநிதி தெரிவித்ததை அடுத்து நில

(4-ம் பக்கம் பார்க்க)

## மணலாறில் குண்டுவீச்சு; 4பேர் பலி, 9 பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
மணலாறு மாவட்டத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் 5-00 மணியளவில் அவ்ரோ விமானம் ஒன்று நடத்திய தாக்குதலில், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியானார்கள். ஒரே குடும்பத்தை சேர்ந்த 9 பேர் படுகாய

(4-ம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இராணுவம் பின்வாங்கியது

[திருமலை]
திருமலை - கண்டி வீதி 5ம் கட்டை, மங்கிபிறிச் ஆகிய இராணுவ முகாம்களுக்கிடையில் உள்ள விளாத்திக்குளம் என்னும் இடத்தில் விடுதலைப் புலிகள்மீது இராணுவத்தினர்

(4-ம் பக்கம் பார்க்க)

★ உல்லாசப் பயணிகளாக வந்த

# 10 மனித உரிமை குழுவினரை உடன் கைதுசெய்ய பணிப்பு

## வடக்கு-கிழக்கு செல்லத் தடை

(கொழும்பு)
**சர்வதேச மனித உரிமை அமைப்புகளை சேர்ந்த 10 வெளிநாட்டவர்கள் இலங்கைக்குள் நுழைந்துவிட்டதாகவும் இவர்களை வடக்கு-கிழக்கினுள் நுழையவிடாது உடனடியாக கைதுசெய்யுமாறும் பாதுகாப்பு அமைச்சு பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.**

உல்லாசப் பயணிகள் எனத் தம்மைக் கூறிக்கொண்டு அந்த விஸாவில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 10 வெளிநாட்டவர்கள் அண்மையில் இலங்கைக்குள் நுழைந்துவிட்டனராம்.

அரசவிரோத நடவடிக்கையில் ஈடுபடும் வெளிநாட்டவர் எவரையும் உடனடியாகக் கைது செய்யுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளதாம்.

இந்த பத்துப்பேரும் வெவ்வேறு நாடுகளைச் சேர்ந்த பல மனித உரிமை அமைப்புக்களை சேர்ந்தவர்களாம்.

இவர்களை வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்குள் செல்லாமல் தடுக்கவும் அரசு சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளதாம். (சி)

## காரைநகர் முகாமிலிருந்து ஷெல் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
காரைநகர் கடற்படை முகாமிலிருந்து குடிமனைகளை நோக்கி நேற்று பல தடவை ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

நேற்று முழுவதும் இடைக்கிடை இத்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. களபூமி, கருங்காலி, பலகாட்டு பகுதிகளை நோக்கியே பெருமளவில்

(4-ம் பக்கம் பார்க்க)

## அமைதியான புத்தாண்டு

(யாழ்ப்பாணம்)
வடக்கு-கிழக்கு மாகாணங்களில் புதுவருட தினக் கொண்டாட்டங்கள் நேற்று மிக எளிமையான முறையில் கொண்டாடப்பட்டன.

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் அரசுபேச்சுவார்த்தை மீண்டும் ஆரம்பமாகும்?

(லண்டன்)
விடுதலைப் புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் மீண்டும் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கான சூழ்நிலைகள் இன்னும் இருக்கவே செய்கின்றன; அடுத்த சில மாதங்களில் இரு தரப்பினருக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகலாம்.

பி. பி. ஸி கொழும்பு முகவர் கிறிஸ் மொறிஸ் அனுப்பியிருந்த 'கொழும்பு கடிதம்' என்ற தலைப்பில் அமைந்த கண்ணோட்டத்தில்மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார்.

வடக்கு-கிழக்கில் மேற்கொள்ளப்பட்டுவரும் சிவில் யுத்தத்தை ஒரு முடிவுமில்

(4-ம் பக்கம் பார்க்க)

## கொழும்பிலிருந்து வடபகுதிக்கு அதிகளவு பயணிகள்

(பூநகரி)
தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு, கொழும்பிலிருந்து வடபகுதிக்குப் பெருமளவு பயணிகள் வந்திருந்தனர். இவர்கள் வவுனியாவிலிருந்து யாழ். மாவட்டத்திற்கு வருவதற்குப் போக்குவரத்து வசதிகள் இல்லாத காரணத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பூநகரியில் தரித்து நிற்கும் மினி பஸ்கள், காலியாக இங்கிருந்து வவுனியா சென்று கொழும்புப் பயணிகளை ஏற்றி வந்தன.

[4-ம் பக்கம் பார்க்க]

## இடைநிறுத்தல் கடிதங்களை வழங்குவதற்கு மறுப்பு

(காங்கேசன்துறை)
காங்கேசன்துறை லங்கா சிமெந்து நிறுவனத் தொழிலாளர்கள், வேலை இடைநிறுத்தல் கடிதத்தை ஏற்க முன்வந்தபோதும், நிர்வாகம்

(4-ம் பக்கம் பார்க்க)

## "அரசின் நிபந்தனையில் எவ்வித மாற்றமுமில்லை"

- பிரட்மன் வீரக்கோன்

(கொழும்பு)
புலிகளுடனான அரசின் நிபந்தனையில் எவ்வித மாற்றமும் இல்லையென்று ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்

புலிகளுடன் சமாதானம்,

[4ம் பக்கம் பார்க்க]

## பண்ணை தாம்போதி திருத்தப்படுகிறது

[ஊர்காவற்றுறை]
யாழ்-பண்ணை வீதி தற்பொழுது திருத்தம் செய்யப்பட்டுவருவதால் விரைவில் இந்த வீதி மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்படவிருக்கிறது.

இந்த வீதி ஒடுக்கமாக இருப்பதால் சிறிய வாகனங்கள்தான் செல்லக்கூடியதாக இருக்கின்றது. [59]

## இராணுவ நடவடிக்கையால் பயணிகள் பாதிப்பு

(யாழ்ப்பாணம்)
வடபகுதியில் இருந்து கொழும்பு செல்லும் பயணிகள், வவுனியா தடைமுகாமில் இராணுவ நடவடிக்கை அதிகரித்து வருவதனால் வவுனியாவிற்கான போக்குவரத்துச் சேவை தற்காலிகமாக சில தினங்களாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை கொழும்பிலிருந்து வடபகுதிக்கு வரும் பயணிகள், லொறிச்சாரதிகள் ஆகியோர் தாக்கப்பட்டும் சில பெறுமதியான பொருட்கள் பறிகொடுக்க நேரிடுகிறது. இதனால் கொழும்பிலிருந்து பெறுமதிமிக்க பொருட்களை கொழும்பில் வைத்துவிட்டு வரவேண்டிய நிலை ஏற்படுவதாக பயணி ஒருவர் தெரிவித்தார் (23)

வெளிநாட்டமைச்சின் அனுமதியின்றி—

## பத்திரிகையாளர்களை பொலிஸார் விசாரணைசெய்ய முடியாது

[கொழும்பு]
வெளிநாட்டு நிருபர்களை இலங்கை வெளிநாட்டமைச்சின் அனுமதியின்றி எதுவித பொலிஸ் விசாரணையும் மேற்கொள்ள முடியாது என்ற விதி இனிமேல் தீவிரமாக அமுல்படுத்தப்படும்; இலங்கைப் பத்திரிகையாளர்களுக்கும் இந்த விதி செல்லுபடியாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## ராகு கேது மாற்றம்

13-4-91ல் ராகுகேது மாற்றமும் புத்தாண்டுப் பலன்களும் ரூ. 6/- எங்கும் கிடைக்கும். ராகு கேது மாற்றத்தின் பின்னும் செவ்வாயின் கெட்ட பார்வையால் யுத்தம் தொடரும்; Prof. சத்தியதாஸன் ஞானம்ஸ், சித்தன்கேணி சந்தி [சி-4639]

## பாலாஜீ புத்தகசாலை

செங்கை ஆழியானின் யாக குண்டம், ஆறுகால்மடம், கந்தவேள் கோட்டம் மற்றும் புவியியல், வரலாறு முதலிய புத்தகங்கள் விற்பனைக்குண்டு. (புத்தாண்டை முன்னிட்டு விசேட தள்ளுபடி) 15/6, முதலாம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-4634)

## விலங்கியல் வகுப்பு

G. C. E. (A/L) 91, 92, மீள் வகுப்புகளுக்கான விலங்கியல் பாடம் அனுபவம் வாய்ந்த பட்டதாரி கல்லூரி ஆசிரியரினால் தனிப்பிட்ட முறையில் கற்பித்துக்கொடுக்கப்படும். தொடர்பு: 63. பொற்பதி வீதி, கொக்குவில். (சி 4523)

## மருந்து தட்டுப்பாடு

[பண்டத்தரிப்பு]

சங்கானை பட்டின உப அலுவலகத்தின் நிர்வாகத்தில் இயங்கிவரும் சித்த ஆயுள்வேத இலவச வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (72)

## புதிய விஞ்ஞானக் கழகம்

எழிலகம் முன்பாக, யாழ்ப்பாணம்.

**DAY CLASS**

**91 A/L**

**PHYSICS**

By

Mr. நந்தகுமார், B. Sc.

TUE., WED., THU.

12-00 — 1-00 **SOUND**

1-00 — 2-00 **PROPERTIES OF MATER**

ஆரம்பம்: 16-04-1991.

12-00

(ஏ-1227)

## அரசாங்க அறிவித்தல்

### சுகாதார சேவைகள்

யாழ்ப்பாண/கிளிநொச்சி மாவட்டங்களில் கீழ்க் குறிப்பிட்ட வைத்தியசாலைகளில் ஒப்பந்த அடிப்படையில் கடமைபுரிய ஓய்வுபெற்ற பதிவு வைத்திய உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

**யாழ்ப்பாண மாவட்டம்:**

1. மாவட்ட வைத்தியசாலை ஊர்காவற்றுறை (தற்காலிகமாக வேலணை மகாவித்தியாலயத்தில் இயங்கி வருகின்றது.)
2. மத்திய மருந்தகம், முள்ளியான்.

**கிளிநொச்சி மாவட்டம்:**

1. மத்தியமருந்தகம் - முழங்காவில்
2. மத்தியமருந்தகம் - கந்தாவளை

சம்பள விபரம் விண்ணப்பத்தாரர்களுடன் கலந்தாலோசித்து நிர்ணயிக்கப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக விண்ணப்பங்களை சமர்ப்பிக்கவும்;

ந. கனகசபை
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

பி. சு. சே: ப. பணிமனை.
57, விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம்;
12-04-91.

(ஏ-1226)

## புலோலியில் 52 வெங்காய செய்கையாளருக்கு $7\frac{1}{2}$ லட்சம் ரூபா கடனுதவி

[யாழ்ப்பாணம்] புலோலி மேற்கு வெண்காயச் செய்கையாளர் 52 பேருக்கு பருத்தித்துறை இலங்கை வங்கி ஏழரை லட்சம் ரூபாவை கடனாக வழங்கியுள்ளது.

வழங்கிய கடன்கள் உரிய முறையில் பயன்படுத்தப்பட்டதா? என அறிய வங்கி முகாமையாளர் திரு. எஸ். மகாலிங்கம் கடன் வழங்கு உத்தியோகத்தர்கள் திரு ஆர். சிவராமலிங்கம், திரு. ஆர். டஞ்சலிங்கம் ஆகியோர் செய்கைமேற்கொள்ளப்பட்ட விளை நிலையங்களுக்குச்சென்று பார்வையிட்டனர்

விளை நிலங்களைப் பார்வையிட்டபோது உண்மையில் தாங்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்ததாகவும் விவசாயிகள் எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியிலும் மிகவும் உற்சாகத்துடன் செய்கையில் மேற்கொண்டிருப்பதை தங்களால் அவதானிக்க முடிந்தது என்றும் குறிப்பிட்டார்கள்.

## 31ம் நாள் நினைவஞ்சலி



★

பிறப்பு: 24-08-1918

இறப்பு: 16-03-1991

★

### அமரர் நாகமுத்து அப்புத்துரை

அன்பாய் பண்பாய் பாசத்துடன் எம்மையெல்லாம் வழிநடத்திச் சென்ற எம் அன்புத் தெய்வமே. உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் வாடும்!
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.

கலையரசு வீதி,
நவாலி தெற்கு,
மானிப்பாய்.

(சி-4626)

## 91-வது நாள் நினைவஞ்சலி



### செல்வி சண்முகநாதன் நாகேஸ்வரி

மலர்வு: 25-09-1969 மறைவு: 15-01-1991

ஆருயிர்ச் செல்வமே! எம்மை ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத் துயிலில் மறைந்து 91 நாட்கள் முடிந்தும் எம் மனத்தை விட்டகலாத தெய்வமே. உன் ஆன்மா சாந்தி அடைய இறைவனை இறைஞ்சுகிறோம்.

உன் பிரிவால் வாடும்!
குடும்பத்தினர்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

(சி-4638)

## மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ் வண்ணை ஸ்ரீகாமாட்சி அம்பாள் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 11ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இம் மாதம் 30ம் திகதி பூங்காவன உற்சவத்துடன் முடிவடையும் மகோற்சவ நிகழ்ச்சிகளில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் விசேட அபிஷேக நிகழ்ச்சிகளும் நடைபெறும். (க)

## நிறுவை அளவை முத்திரை

[கொழும்புத்துறை]

சுழிபுரம் பிரதேச சபைக் காரியாலயத்தில் கடந்த 11-ம் திகதி தொடக்கம் 19-ம் திகதி வெள்ளிக்கிழமை வரையும் நிறுவை அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடப்படும் என நிறுவை அளவைத்திணைக்களப் பொறுப்பதிகாரி எஸ். ரூபேந்திரன் தெரிவித்துள்ளார். [154]

## நியமனம்

(உடுவில்)

சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் எஸ். பொன்னம்பலம் இம் மாதம் முதல் மருதனைமடம் கோட்டக்கல்வி அலுவலகத்தில் கல்வி அதிகாரியாக நியமனம் பெற்று கடமையாற்றி வருகின்றார்.

## தானியம், உரம் விற்கப்பட்டது

(உடுவில்)

மானிப்பாய்-வடக்கு ஐக்கிய நாணயச் சங்கத்தினர் தமது முப்பத்தாறு அங்கத்தவர்களுக்கு அமெரிக்க ஸ்தாபன உதவி பெற்று விதை தானியங்கள், மண்ணெண்ணெய், உரம் போன்றவற்றை வழங்கியுள்ளனர்

இருபது பேருக்கு 4 கிலோ பயறு, 6பேருக்கு 4 கிலோ வீதம் கௌபி, பேருக்கு 4 கிலோ எள்ளு, 4 பேருக்கு 4 கிலோ குரக்கன். 2 பேருக்கு தலா 6 ரின் பீற்றூட் விதைகள் மற்றும் ஆளுக்கு அரை அந்தர் உரம், 5லீற்றர் மண்ணெண்ணெய் ஆகியவற்றை வழங்கியுள்ளனர். [109]

## பன்னிரண்டு பதுங்குகுழிகள்

(உடுவில்)

விமானத் தாக்குதல்களில் இருந்து மக்களை பாதுகாத்துக் கொள்ளும் நோக்குடன் சுன்னாகம் வர்த்தகர்களால் பன்னிரண்டு பதுங்குக் குழிகள் அமைக்கப்பட்டுள்ளன

மேலும் பல பதுங்குகுழிகளை அமைத்து கொள்ள பல வர்த்தகர்கள் முன்வந்துள்ளனர்.

# ஊழியர் ஊக்கமின்மையால் தபால் பொதிகள் தேக்கம்

(மாங்குளம்)

முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களுக்கான தபால் பொதிகள் வவுனியா தபாலகத்தில் பல மாதங்களாகத் தேங்கிக் கிடக்கின்றன.

மேற்படி திணைக்கள ஊழியர்கள், உத்தியோகத்தர்களது ஊக்கமின்மையால் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மாங்குளம், ஒட்டுசுட்டான், முள்ளியவளை, கிளிநொச்சி, பரந்தன் ஆகிய இடங்களிலுள்ள தபாலகங்களுக்குரிய தபால் பொதிகள் தேங்கிக்கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வவுனியாவில் தேங்கிக்கிடக்கும் மேற்படி தபால் பொதிகளை எடுத்துவர முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள ஊழியர்கள் எவரும் அக்கறைகொள்ளாமையே இதற்குக் காரணமெனவும் தெரியவருகிறது.

இதேவேளை முல்லைத்தீவு மாங்குளத்தில் கடந்த சில மாதங்களாகத் தபால்சேவைகள் சீரடையாததினால் அப்பகுதி மக்கள் பலவித பாதிப்புகளை எதிர்நோக்கிவருவதாகப் புகாரிடப்படுகிறது.

உரிய நேரத்தில் கடல், தரை மார்க்கமாகத் தபால்கள் வந்துசேராததால் அதிகாரிகள், கல்லூரி மாணவர்கள், விவசாயிகள் பலரும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (150)

# தீயை அணைக்க 2 வருடம் செல்லும்

[குவைத் நகர்]

குவைத்தில் உள்ள எண்ணெய்க்கிணறுகளில் 500 எண்ணெய்க் கிணறுகள் தற்போது எரிந்துகொண்டிருக்கின்றன. இவற்றை அணைப்பதற்கு 2 வருடங்கள் பிடிக்குமென்று வெளிநாட்டு நிபுணர்கள், குவைத் அரசுக்குத் தெரிவித்துள்ளனர்.

இதன் கால அளவைக் குறைக்க அமெரிக்க உதவியை குவைத் நாடியுள்ளது. (வி)

## தனியார் விற்பனை நிலையத்தில்

# மலிவான விலையில் உணவுப்பொருட்கள்:

(பருத்தித்துறை)

பருத்தித்துறைக் கிராமக்கோட்டுச் சந்தியிலுள்ள தனியார் விற்பனை நிலையமொன்றில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க விலைகளிலும் பார்க்கக் குறைவான விலைகளில் பாவனையாளர்களுக்கு உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

ப. நோ. கூ. சங்கத்தில் 1 கிலோ கோதுமை மா 25 ரூபாவாகவும், 1 கிலோ புளி 22 ரூபாவாகவும், 1 கிலோ பயறு 50 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வரும் போது இத்தனியார் விற்பனை நிலையத்தில் 1கிலோ கோதுமை மா 24 ரூபாவாகவும், 1 கிலோ புளி 18 ரூபாவாகவும், 1கிலோ பயறு 32 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பாவனையாளர் தெரிவித்துள்ளனர். (52)

# இன்று ஆரம்பமாகும் பயிற்சி கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

அறவழி நூலகசபையினால் நடத்தப்படும் க. பொ. த. (உயர்தர) வகுப்பு மாணவர்களுக்கான மீட்டல் பயிற்சி கருத்தரங்கு இன்று காலை தொடக்கம் நடைபெறவிருக்கிறது.

இம்மாதம் 19ம் திகதிவரையும் கைதடி நுணாவிலிலுள்ள அறவழிப் பணிமனையில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இம்மாதம் நடைபெறவுள்ள க. பொ. த. (உயர்தர)பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்படுத்துமுகமாக நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பங்குபற்றவுள்ளனர்.

# இராசி பலன்

15-04-1991
திங்கட்கிழமை

பிரதமை ந: இ: 12-15 வரை, அச்சுவினி மு. இ:11-41 வரை, சித்தயோகம், இராகு காலம் காலை 7-34 முதல் 9-04 வரை. சுபநேரம் 12-04 முதல் 1-34 வரை.

மேடம்; தொழில்துறை ஆராய்ச்சி, பணவரவு, மகிழ்ச்சியான சம்பவம்.

இடபம்; தெய்வீக வழிபாடு, தொழில் லாபம், குடும்ப சுகம்.

மிதுனம்; விருப்பம் நிறைவேறுமை, கடன் சுமை, குடும்பப்பிரிவு.

கடகம்; கல்வியால் புகழ், தொழில் மாற்றம், அந்நியர் உதவி.

சிங்கம்; ஏமாற்றம், இனசனப்பகை, தவறான போக்கு.

கன்னி: தொழில் தகராறு, பணக்கஷ்டம், வாக்குக்கலகம்.

துலாம்: புதிய சிந்தனை, மாதா பிதா உதவி, குடும்ப சிறப்பு.

விருச்சிகம்; எதிர்பாராத சம்பவம், திருமணயோகம், கருணை.

தனுசு; கருத்துமுரண்பாடு, தொழில் கஷ்டம், குடும்ப மோதல்.

மகரம்; வயிற்றில் ரோகம், வைத்தியச்செலவு, தொழில் நஷ்டம்.

கும்பம்; கடமையுணர்வு, வஸ்திரலாபம், தொழில் பாராட்டு.

மீனம்; வாக்குக் கலகம், பணத்தகராறு, வீட்டில் சோதனை.

ஜோஸ்யர்

# தரம்குறைந்தபாண்விற்பனை பொதுமக்கள்புகார்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலுள்ள கொய்யாத்தோட்டம், பாஷையூர் பகுதிகளில் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் பாண்களின் தரம் மிகக் குறைந்ததாகவும், சுகாதார முறைக்கு மாறுமட்டதாகவும் உள்ளதாகப் பாவனையாளர்கள் புகார் செய்துள்ளனர்.

இப்பகுதிகளில் தயாரிக்கப்படும் பாண்களின் நிறைகுறைவாகக் காணப்படுவதுடன், நன்கு பதப்படுத்தப்படாத நிலையில் இருப்பதாகவும், பெரும்பாலான பாண்களில் வண்டு, பூச்சி, சிறு புழுக்களும் இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

விற்பனை செய்யப்படாத பாண்களைச் சிறு துண்டுகளாக அரிந்து, வெயிலில் காயவைத்துப் பின்பு ''பிஸ்கட்டாக'' விற்பனை செய்யப்படுவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (வி)

# இடைவழியில் நிற்கும் 300 வடபகுதி லொறிகள்

(பூநகரி)

வடபகுதியிலிருந்து விவசாய உற்பத்திகளை ஏற்றிக்கொண்டு கொழும்பு நோக்கிச் சென்ற முன்னூறு லொறிகள் வவுனியாவிற்கு அப்பால் செல்ல முடியாத நிலையில் நொச்சிமோட்டையில் தரித்து நிற்கின்றன.

பல நாட்களாக இந்த லொறிகள் தரித்து நிற்பதால் இவற்றில் எடுத்துச் செல்லப்பட்ட பொருட்கள் பழுதடைந்து விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (23)

# ஆசிரியர் இடமாற்றங்களை நிறுத்துமாறு பணிப்புரை

(கொழும்பு)

சகல ஆசிரியர்களுக்குமான இடமாற்றங்களையும் உடனடியாக நிறுத்துமாறு கல்வி உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி பணித்துள்ளார்.

இடமாற்றங்களை முறையாக நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு திட்டம் அமுலாக்கப்படஇருப்பதால் இவ் உத்தரவு பியப்பிக்கப்பட்டுள்ளதாக கல்வி ஆணைக்குழுவின் செயலாளர் எஸ் வீரரத்ன தெரிவித்தார். (ரி)

# விரைவில் அமைதி ஏற்படுத்த அரசு முயற்சி

(புத்தளம்)

நாட்டில் விரைவில் அமைதி ஏற்படுத்த அரசு முயற்சி செய்துவருகிறது என்று கல்வி இராஜாங்க அமைச்சரும் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான திருமதி ராஜமனோகரி புலேந்திரன் தெரிவித்தார்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள அகதிகள் மத்தியில் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அமைதி ஏற்பட்ட பின்னர் மீண்டும் அகதிகள் தமது சொந்த இடங்களுக்கு திரும்ப முடியும். இதற்கான முயற்சிகளில் அரசு முயற்சி செய்து வருகிறது என்றும் அவர் மேலும் கூறினார். (ரி)

# சத்துணவு, மருந்துகளின்றி முல்லைத்தீவில் தாய்மார், சிசுக்கள் மரணம்

(கொழும்புத்துறை)

முல்லைத்தீவு மாவட்டத்தில் சிசுக்கள், கர்ப்பிணித்தாய்மார்கள் மரணம் அதிரிக்க நேரிடுவதாக அங்கிருந்து வரும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் உள்ள கர்ப்பிணித்தாய்மார்களுக்கு, சிசுக்களுக்கு போதிய சத்துணவு, பாலுணவு, மருந்து வகைகள் இல்லாததாலேயே இவர்கள் மரணித்து வருகின்றனர்.

இந்நிலை தொடர்ந்து நீடித்தால் இவர்களது மரணம் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது. (154)

# விரிவுரை வழங்க கோரிக்கை

(பருத்தித்துறை)

வெளிவாரிப் பட்டப்படிப்பினை மேற்கொள்ளும் பயிலுநர் ஆசிரியர்களுக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மூலம் விரிவுரை வழங்கவும், பட்டப் பரீட்சைக்குரிய வசதிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சிப் பயிலுநர் ஆசிரியர் சங்கம் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆ. துரைராஜாவைக் கேட்டுள்ளது.

அம்மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது: பயிலுநர் ஆசிரியர்களாக நியமனம் பெற்ற பலர் க. பொ. த. (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்து தமது தகுதிக்கேற்ப வெளிவாரிப்பட்டப் படிப்பை தனியார் கல்வி நிலையங்களில் மேற்கொண்டு வருகின்றனர் ஆனால் தனிப்பட்ட கல்வி நிலையங்களில் வழங்கப்படும் போதனைகள் போதியதாக இல்லாததுடன் கூடிய பணச்செலவையும் ஏற்படுத்திவருகின்றது. எனவே யாழ் பல்கலைக் கழகம் பயிலுநர் ஆசிரியர்களுக்கு இவ்வுதவிகளை வழங்குமாயின் இப்பயிலுநர் ஆசிரியர்கள் உயர்கல்வியைப் பெற்றுக்கொள்ளச் சிறந்த வாய்ப்புக்கள் ஏற்படும். [52]

# சிறுதானியங்கள் வழங்கப்பட்டன

(மாங்குளம்)

அல்வாய் தெற்கு பாரதிதாசன் ஐக்கிய நாணய சங்கம் இப்பகுதியில் உள்ள 119 விவசாயிகளுக்கு உப உணவு செய்கைக்கென சிறுதானியங்களை வழங்கியுள்ளது.

மேற்குறித்த விவசாயிகளுக்கு மண்ணெண்ணை, கௌபி, பயறு, எள்ளு, குரக்கன் ஆகிய உற்பத்தித் தானியங்களை 'கெயர்' நிறுவன அனுசரணையுடன் வழங்கப்பட்டது.

# நோயாளரின் உதவியாளர் குறித்து எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

''யாழ். மாவட்டத்திலிருந்து அவசர சிகிச்சை பெறுவதற்காக கப்பலில் கொழும்பு செல்லும் நோயாளருக்கு உதவியாகச் செல்வோர் உண்மையான உதவியாளர்கள்தானா என்பதை உறுதிப்படுத்தப்பட்டபின்பே நோயாளர்களுடன் செல்ல இனிமேல் அனுமதிக்கப்படுவார்கள்.''

இவ்வாறு யாழ் போதனா வைத்தியசாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கொழும்புசெல்லும் நோயாளர்களுடன் உதவியாட்கள் எனக் கூறிக்கொண்டு கொழும்புசென்றவுடன் இந்த உதவியாட்கள் மாயமாய் மறைந்துவிடுவதாகவும் அல்லது வேறு சாட்டுப்போக்குகள் கூறிவிட்டு நோயாளர்களை அநாதரவாக விட்டுவிட்டு சென்று விடுவதால் இந் நோயாளர்கள் கொழும்பில் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இம்முறை கப்பலில் நோயாளர்களுடன் செல்லும் உதவியாட்கள் விடயத்தில் கூடிய கவனம் எடுக்கப்படுமென்றும் அந்த அதிகாரி தெரிவித்தார் (வி)

# நினைவுதின விழா

(மாங்குளம்)

மேலைப் புலோலி சதாவதானி நா. கதிரவேற்பிள்ளையின் 84 ஆவது நினைவுதின விழா நாளை 16-ம் திகதி நிலையத்தில் நிலையத்தலைவர் அ. துரைசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு யாழ்ப்பாணப்பல்கலைக்கழக துணைவேந்தர் திரு அ. துரைராசா பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். இவ்விழாவன்று பட்டிமன்ற விவாதங்களும் நடைபெறவுள்ளன. (150)

# வருடாந்த கூட்டம்

(கொழும்புத்துறை)

யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச்சங்கங்களின் சமாசத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 28ந் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். வைத்தீஸ்வரா வித்தியாசாலையில் தலைவர் திரு. க. முருகநேசன் தலைமையில் நடைபெறும். (154)

# நாவலாசிரியர் காலமானார்

(சென்னை)

தி. மு. க. அமைப்பு செயலரும் பிரபல நாவலாசிரியருமான திரு எஸ் எஸ் தென்னரெட்டி நேற்று முன்தினம் சென்னையில் மாரடைப்பால் காலமானார்.

# யாழ். ஆஸ்பத்திரியில் 12 மணிநேரம் பணியாற்றுமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"யாழ். போதனா வைத்திய சாலையில் கடமைபுரியும் எல்லா அமைய ஊழியர்களும் இன்றைய நிலைமையை உணர்ந்து 12 மணித்தியாலங்களாவது கடமை புரியவேண்டும்"

இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் அமைய ஊழியர்களை சுற்றறிக்கை மூலம் கேட்டுள்ளார்.

மேலும் சுற்றறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாவது; இன்றைய நாட்டு நிலைமை, ஊழியர் பற்றாக்குறை, போக்குவரத்து சீரின்மை ஆகிய காரணங்களால் யாழ். போதனா வைத்தியசாலையில் வேலைகளை ஒழுங்காகச் செய்ய முடியாமல் இருக்கிறது. எல்லா அமைய ஊழியர்களும் காலை 7 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை ஆகக் குறைந்தது 12 மணித்தியாலங்களாவது கடமையைச் செய்யுங்கள்.

நிலைமைகள் சீர்வந்த பின் 8 மணித்தியாலம் வேலைசெய்யும் முறைக்கு கொண்டுவருவதுபற்றி ஆலோசிக்கலாம். (152)

## டாக்டர் அம்பேத்கார் நூற்றாண்டு விழா

(சென்னை)

இந்திய அரசியல் மேதை டாக்டர் அம்பேத்காரின் பிறந்த நாள் நூற்றாண்டு விழா, இந்தியாவின் பல பகுதிகளிலும் வெகு விமரிசையாக நேற்றுக் கொண்டாடப்பட்டது.

இந்நாளையொட்டிப் புதிய ஒரு ரூபா நாணயமும், ஒரு ரூபா சிறப்பு அஞ்சல் முத்திரையும் வெளியிடப்பட்டன.

டாக்டர் அம்பேத்காரின் வாழ்க்கை பற்றிய தேசிய ஆராய்ச்சி மாநாடு ஒன்று, இன்று புதுடில்லியில் பிரதம மந்திரி திரு. சந்திரசேகரினால் ஆரம்பித்துவைக்கப்படும் (பூ)

## கொழும்பிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

மேலும் பயணிகளின் தொகை அதிகரித்துவருவதை முன்னிட்டு, 15 மினி பஸ்கள் சேவையில் ஈடுபட்டன.

வவுனியா செல்வதற்கு மேலும் மினி பஸ்கள் ஒழுங்கு செய்யப்பட்டுவருகின்றது. (23

## ஜெயலலிதா பெரியார் மாவட்டத்தில் போட்டி

(சென்னை)

அ. தி. மு. க. செயலாளர் செல்வி ஜெயலலிதா பெரியார் மாவட்டம் காங்கேயன் தொகுதியில் போட்டியிடவுள்ளார்.

நேற்று சென்னையில் அ. தி. மு. க.வினால் முதன் முதலாக வெளியிடப்பட்ட வேட்பாளர் பட்டியலில் அக்கட்சியின் சார்பில் சட்ட சபைக்கான 95 பேர்களின் பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டன.

இரா. நெடுஞ்செழியன் தேனி தொகுதியில் போட்டியிடவுள்ளார்.

அ. தி. மு. க.வில் 17 பெண்கள் சட்ட சபைக்கு போட்டியிடுவர்.

சட்ட சபைக்கான எஞ்சிய 73 பேர்களது பெயர்களும் லோக சபாவுக்கான 11 பேர்களது பெயர்ப் பட்டியலும் எதிர்வரும் 18-ம் திகதி வெளியிடப்படும்.

வரும் 18-ம் திகதி அ. தி. மு. க.வின் தேர்தல் அறிக்கையும் வெளியிடப்படுமென அ. தி. மு. க. செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று சென்னையில் பத்திரிகையாளரிடம் தெரிவித்தார். (பூ)

## ராஜீவ் முடிவெடுப்பார்

(சென்னை)

இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கின் திரு. அப்துல் சமதிற்கும் மத்திய வர்த்தக அமைச்சர் டாக்டர் சுப்பிரமணிய சுவாமிக்கும் தமிழ் நாட்டில் லோக சபைக்கான தொகுதி ஒதுக்கீடு பற்றி திரு ராஜீவ் காந்தியே முடிவு எடுப்பார் என செல்வி ஜெயலலிதா சென்னையில் கூறினார். (பூ)

## அரசின்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

போர் நிறுத்தம் பற்றிக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

தற்காலிகப் போர் நிறுத்தத்தை அரசு விரும்பவில்லை. வடக்கு-கிழக்கில் நிரந்தரமான சமாதானத் தீர்வை ஏற்படுத்தவே அரசு விரும்புகிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ரி)

## பொதுமக்கள் சுட்டுக்கொலை

[அம்பாறை]

அக்கரைப்பற்றுப் பகுதியில் உள்ள ஆலையடிவேம்பு பகுதியை விசேட அதிரடிப்படையினர் சுற்றிவளைத்து தேடுதல் மேற்கொண்டதில் விடுதலைப் புலிகளின் முழுநேர ஆதரவாளரான கண்ணன் என்பவரையும், இரு பொதுமக்களையும் சுட்டுக் கொலைசெய்துள்ளதாகத் தெரியவந்துள்ளது. [வீ]

## புலிகள்-அரசு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

லாது தொடர்ந்தும் மேற்கொள்ளமுடியாது என்பதை இன்று பலரும் உணர்ந்துவிட்டனர்.

இதேவேளையில் சமாதானத்தைப் பற்றி இரு தரப்பினரும் பல தடவைகள் குறிப்பிட்டுப் பேசியுள்ளனர்.

ஆனால் யார் சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொள்வது என்பதும் ஒருகேள்வியாக உள்ளது.

எது எப்படி இருப்பினும் விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் எதிர்வரும் மாதங்களில் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை நடப்பதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கவே செய்கின்றன எனவும் அவர் தெரிவித்திருக்கிறார்.

## அமைதியான

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வழமையாகக் காணப்படும் ஆடம்பரங்களோ, கொண்டாட்டங்களோ எதுவுமின்றி மக்கள் அமைதியாக ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டதை காணக்கூடியதாக இருந்தது.

வடக்கு-கிழக்கில் நிலவும் போர் மேகங்கள் அகன்று, அமைதியும், சமாதானமும் நிலவவேண்டும் என பிரார்த்தனைகள், பூசைகள், வழிபாடுகள் நடைபெற்றன.

## வெளிநாட்டமைச்சின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஜனாதிபதியின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு பிரட்மன் வீரக்கோன் இவ்வாறு தெரிவித்தார்.

அகில இந்திய வானொலி நிருபருக்கான பாதுகாப்பு சம்பந்தமாக கருத்து வெளியிட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது,

அகில இந்திய வானொலி நிருபருக்கு தொலைபேசி மூலம் வந்த பயமுறுத்தல் ஒரு பாரதூரமான நடவடிக்கை இதை அனுமதிக்கமுடியாது தொலைபேசி எங்கிருந்து வந்தது என்பதை நாம் விசாரிப்போம் என்றார்.

# தலைமைதேர்தல்கமிஷனரை பதவிவிலகுமாறு கோரிக்கை

[புதுடில்லி]

தலைமைத் தேர்தல் கமிஷனர் திரு ரி என். சேஷன் பதவி விலகவேண்டும் எனப் பாரதிய ஜனதா கட்சி கோரியுள்ளது.

அரசியல்கட்சிகளுக்கிடையிலான பிணக்குகளை மூன்றாது தரப்பினரின் விபரத்தை தேர்கழுஷன் விசாரிக்கலாமெனத் தலைமைத் தேர்தல் கமிஷனர் அளித்த தீர்ப்பையடுத்தே பாரதீய ஜனதா கட்சி மேற்படி முடிவுக்கு வந்துள்ளது. [க]

## கருணாநிதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

விய பரபரப்பான சூழ்நிலையில் நிருபர் ஒருவரின் கேள்விக்கு திரு. கருணாநிதி பின்வருமாறு பதில் அளித்தார். அப்படி ஒரு யோசனை தமக்கு இருக்கிறது என்றும் தேர்தலில் போட்டியிடாமல் தமிழ் நாடு முழுவதும் தேர்தல் பிரசாரம் செய்யலாமென்று தான் கருதுவதாகவும் எனினும் அதுபற்றி தமது சகாக்களிடம் கலந்துபேசி முடிவு எடுக்கப்படும் என்றும் கருணாநிதி தெரிவித்தார்.

சென்னையில் பத்திரிகையாளரிடம் அவர் பேசுகையில்; தி. மு. க. வேட்பாளர் பட்டியல் இன்னும் ஓரிரு நாட்களில் வெளியிடப்படும் என்றும் மற்றும் தேர்தல் அறிக்கை தயாராகிக் கொண்டிருப்பதாகவும் தோழமைக் கட்சிகளுடன் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் முடிவடைய தாமதமாகிவிட்டதால் வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க)

## திருமலையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பதுங்கியிருந்து தாக்குதல் மேற்கொள்ள முற்பட்டபோது விடுதலைப்புலிகள் திடீர்த்தாக்குதல் மேற்கொண்டதில் இராணுவம் நிலைகுலைந்து பின்வாங்கியதாகவும், இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் எவ்வித சேமமும் ஏற்படவில்லையென்றும் கூறப்பட்டது. (வி)

## காரைநகர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஷெல்கள் ஏவப்பட்டன.

இதேவேளை கடற்படை முகாம் பகுதியில் குண்டு வெடிப்பு சத்தங்களும் கேட்டவண்ணமிருந்தன. (சி)

## மணலாறில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்தனர்.

நாயாறு, குமுழமுனைப் பகுதிக் குடியிருப்புக்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பலியானோர் விபரம் வருமாறு:

சண்முகலிங்கம் பரமேஸ்வரி (38 வயது). சண்முகலிங்கம் யாழினி (10வயது), சண்முகலிங்கம் தயாராசா (8 வயது), சண்முகலிங்கம் ஜீவராசா (5 வயது).

இத்தாக்குதலில் காயமடைந்தோர் விபரம் வருமாறு; லிங்கராசா (40 வயது). லிங்கராசா ஸ்ரீதேவி (வயது 38), லிங்கராசா தயாபரன் (08 வயது), லிங்கராசா சிறிதரன் (6 வயது), லிங்கராசா சிறிவதனா (4 வயது), விஸ்வராசா நாதன் (12 வயது), மார்க்கண்டு விஜயகுமாரி (25 வயது). மார்க்கண்டு திவாகர் (4 வயது), ராசமணி காஞ்சனா (3 வயது) ஆகியோராவர்.

திருமலையிலிருந்து இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்து வந்து தங்கியிருந்தவர்களை நோக்கி குண்டுவீச்சு தாக்குதல்கள் நிகழ்த்தப்பட்டதும்குறிப்பிடத்தக்கது. (க-வி)

## கூட்டுறவு சங்கங்களின் கடமை நேரம்

(கொழும்பு)

கூட்டுறவு சங்க கிளைகள் காலை 9 மணி முதல் இரவு 8 மணி வரை திறந்திருக்க வேண்டுமென்று கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் திரு. வீரசிங்க மல்லிமாராய்ச்சி நேற்று முன்தினம் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். (க)

## இடைநிறுத்தல்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பெப்ரவரி மாத வேதனத்தை வழங்க மறுத்தமையால் தொழிலாளர்கள் மத்தியில் மீண்டும் குழப்பநிலை ஏற்பட்டுள்ளது.

லங்கா சிமெந்து நிறுவனத் தொழிலாளர்களுக்குப் பெப்ரவரி மாத வேதனத்துடன், வேலை இடைநிறுத்தல் கடிதங்களையும் கையளிக்க மேற்படி நிறுவன நிர்வாகம் முயன்றதையடுத்துத் தொழிலாளர்கள் அக்கடிதங்களைப் பெறாமல் இருந்து வந்தனர்.

ஆனால் லங்கா சிமெந்து நிறுவனக் கைத்தொழில் பொதுத்தொழிலாளர் சங்கம் தொழில் ஆணையாளரையும், உயர் அதிகாரிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்திய பின் மேற்படி வேலை இடைநிறுத்தல் கடிதங்களைப் பெற்றுக்கொள்வதென முடிவுசெய்திருந்தது.

இதற்கமைய மேற்படி நிறுவனத்தைச் சேர்ந்த ஏராளமான தொழிலாளர்கள் தமது பெப்ரவரி மாத வேதனத்தையும், இடைநிறுத்தல் கடிதத்தையும் பெறச் சென்ற சமயம், லங்கா சிமெந்து நிறுவன அதிகாரி அவற்றை வழங்க முடியாதெனக் கூறி மறுப்புத் தெரிவித்ததாகத் தொழிலாளர்கள் தெரிவித்தனர்

இதையடுத்துத் தொழிலாளர் மத்தியில் எழுந்துள்ள குழப்ப நிலையைக் கருத்திற் கொண்டு, கைத்தொழில் பொதுத் தொழிலாளர் சங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகச் சங்க உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார். (86)

## மரண அறிவித்தல்

### இராமலிங்கம் நடராசா

ஊரெழுவைப் பிறப்பிடமாகக் கொண்ட இராமலிங்கம் நடராசா 11-04-1991 வியாழக்கிழமை கொழும்பில் காலமானார். அன்னார் அன்னலட்சுமியின் அன்புக்கணவரும், திரு. இ. துரைஐயா, திருமதி வை. பாக்கியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வரதலோஜினி [ஜேர்மனி], தனலோஜினி [ஜேர்மனி], தர்மலோஜினி [பிரான்ஸ்], ஸ்ரீகரன் [காங்கேசன்துறை சிமெந்துக் கூட்டுத்தாபனம்], மனோகரன், ஜெயகரன் ஆகியோரின் அருமைத் தந்தையும், பாலசுப்பிரமணியம் ஜெயரத்தினம் [ஜேர்மனி], யோகரத்தினம் [பிரான்ஸ்], மகேஸ்வரி ஆகியோரின் மாமனாரும், சர்மிலா, பரமிலா, ஜெயபரிஸ்னன், ஜெயகிருஷ்ணன், ஜெபின்தன் [ஜேர்மனி], ஆகியோரின் பேரனும், இ. இராசரத்தினம், திருமதி கி. ஞானம்மா, இ. தவராஜலிங்கம், இ. பாலச்சந்திரன் ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அவரது ஊரெழு இல்லத்தில் 15- 4-1991 திங்கட்கிழமை [இன்று] காலை 10.30 மணிக்கு நடைபெற்று, ஊரெழு பொக்கணை மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்!

ஊரெழு வடக்கு,
சுன்னாகம்.

இ. தவராஜலிங்கம்

(கி 4645]

## மரண அறிவித்தல்

### அருட்சகோதரி ஸ்கொலஸ்திக்கா ஆறுமுகம்

திருக்குடும்ப சபையைச் சேர்ந்த அருட் சகோதரி ஸ்கொலஸ்திக்கா 13-04-91ல் யாழ்ப்பாணத்தில் காலமானார். அவரின் இறுதிச் சடங்குகள் யாழ். திருக்குடும்பக் கன்னியர் மடத்தில் 15-04-91 திங்கட்கிழமை காலை 8-00 மணிக்கு நடைபெறுமென்பதை அறியத் தருகின்றோம்.

மாகாணத் தலைவி

திருக்குடும்ப மாகாண இல்லம்,
யாழ்ப்பாணம்.

(சி 4646)

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] மேற்கு வீதி, 6[illegible]-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number [illegible]